புகழ்ச்சோழ நாயனார் ஆண்ட பதி. எறிபத்த நாயனார் பிறந்த ஊர். சிவகாமியாண்டார் வாழ்ந்து தொண்டு செய்த பதி. திருவிசைப் பாடல் இயற்றிய கருவூர்த்தேவரின் அவதாரத் தலம். மூலவர் சுயம்பு சற்று சாய்வாக உள்ளார் கருவூராருக்காக சாய்ந்து கொடுத்ததாகச் செய்தி. சோழரின் 5 தலைநகரங்களுள் ஒன்று. கோயில் கல்தூண் ஒன்றில் ஒரு சக்கரம் உள்ளது. இக்கோயில் காலம் பற்றியது எனச் சிலர் கூறும் போதும் பொருள் தெரியவில்லை. மூலவர் மீது மாட்டுக்குளம்பு பட்டது போல இரு பக்கமும் பள்ளங்கள் உள்ளன. சொரசொரப்பாகவும் உள்ளது. 2 அம்பாள் சந்நிதி உள்ளது. அலங்கார நாயகி ஆதியானது. மாலிக்கபூர் காலத்தில் படையெடுப்பில் மண்ணில் மறைந்துபோன அம்பாள் சிலைக்கு வேறு ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் பின்னர் கிடைத்துவிட்டதால் 2 அம்பாள் சந்நிதி என்கின்றனர். ஆண்டவார் கோயிலூர் என்ற ஊரில் ஒரு பெண் ஆண்டாளைப்போல் இறைவனை வேண்டி வணங்கியதாகவும் மணம்கொண்டதாகவும் அதனால் சுவாமி திருவிழாவில் ஒரு நாள் அலங்காரவல்லிக்காக அவ்வூருக்குச் சென்று வருகிறார் என்கின்றனர்.	கிருபாநாயகி உடனுறை பசுபதீஸ்வரர் 06.00 - 12.30 04.00 - 08.30 செயல் அலுவலர் (ராமநாதன்) 04324-262010, 99940 12627
பரசுராமர் தாயைக்கொன்ற பாவம் தீர வழிபட்ட தலம். கேரள பாணிக்கோயில். துவஜஸ்தம்பத்தில் அஷ்ட வித்யேஸ்வரர்கள் உருவம் உள்ளது. வீதியில் உள்ள மேடையை யானை வந்த மேடை என்கின்றனர். கயிலாயத்திலிருந்து வெள்ளை யானை வந்து சுந்தரரை கயிலாயத்திற்கு ஏற்றிச் சென்றது என்பது வரலாறு. கயிலை சென்ற ஆடி சுவாதி அன்று சேக்கிழார் கூட்டத்தார்	உமையம்மை உடனுறை அஞ்சைக்களத்தீஸ்வரர் 05.00 - 10.00 05.00 - 08.00 கொச்சி தேவஸ்வம் போர்டு, ரவுண்டு நார்த், திருச்சூர்-1 (0487-2331124), சுற்றுலா மையம்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
267	திருகோகர்ணம் மகாபலேஸ்வரர் திருக்கோயில் திருக்கோகர்ணம் அஞ்சல் கர்நாடகா-576234	பெங்களூரிலிருந்து நேரடி பஸ் உள்ளது. சென்னையிலிருந்து ரயிலில் செல்ல குண்டக்கல் வழியாக ஹுப்ளி சென்று அங்கிருந்து பேருந்தில் செல்லலாம். மங்களூரிலிருந்து பேருந்துகள் செல்கின்றன. நடுவில் முர்டேஷ்வர் என்ற ஊரில் வானளாவ உயர்ந்த சிவனை கடலோரப் பிரதேசத்தில் தரிசிக்கலாம். மங்களூரிலிருந்து செல்லும் போது உடுப்பி, ஆனேகுட்டே (விநாயகர்), முர்டேஸ்வர் கடலருகே சிவனை தரிசிக்கலாம்.

நன்னிலம்



தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
கோவையிலிருந்து வந்து சிறப்பு விழா நடத்துகின்றனர்	(0487-2320800) நிர்வாக அதிகாரி 0480 - 2812061
கோ-பசு, கர்ணம் - காது சுவாமி பசுவின் காது போலக் குழைந்து காணப்படுவதால் இப்பெயர். அப்பர் அங்கமாலையில் பாடியுள்ளார். இராவணன் இலங்கையில் பிரதிஷ்டை செய்ய கயிலையிலிருந்து சிவபெருமானிடம் பெற்ற லிங்கத்தை இளைப்பாற எண்ணி தரையில் வைக்க இத்தலத்திலேயே வீற்றிருக்க திருவுள்ளம் கொண்டதால் தங்கிவிட்டார். இராவணன் வலிமையனைத்தையும் பெற்று எடுக்க முயன்ற போது பசு காது போல் ஆனது. இவ்வூர் வழக்கப்படி தொட்டு நீராடி மலர் சூட்டி வழிபடலாம். பிரமன், அகத்தியர், காமதேனு, மாக்கண்டேயர், சரஸ்வதி, வசிட்டர், இராவணன், நாகராசன் வழிபட்ட தலம். கொட்டைப்பாக்கு அளவில் சிவலிங்கபாணம். கோகர்ப்பக்குகை கண்டு களிக்கத்தக்கது. 33 தீர்த்தங்கள் உள்ளன. பிராண லிங்கம் கீழே வைக்கப்படக் காரணமாய் இருந்தவர் விநாயகர். நாரதர் வருணனை சிறுநீராக இராவணனுக்கு வரவழைத்து விநாயகர் துணை கொண்டு லிங்கத்தை கீழே இறக்க வைத்தார். ஏனெனில் இராவணன் இந்த லிங்கத்தை இலங்கையில் பிரதிஷ்டை செய்தால் இலங்கைக்கு அழிவில்லை என்ற வரததை சிவபெருமான் அளித்து இருந்தார். அவர் மூன்று முறை அழைத்தும் இராவணன் வராததால் விநாயகர் லிங்கத்தைக் கீழே வைத்தார். தலையில் மூன்று முறை குட்டிக்கொண்டு இராவணன் விநாயகரை வழிபட்டான். முதலில் கோடி தீர்த்தத்தில் நீராடி, பின்பு கடல் நீராடி, பிண்ட தர்ப்பணம் செய்து மீண்டும் நீராடி சிவனை வழிபட வேண்டும் என்பது ஐதீகம். அமாவாசை விசேஷம். பாஸ்கர தலங்களில் ஒன்று மற்றவை காசி, புஷ்பகிரி, காஞ்சி, ஸ்ரீசைலம், சேது, கேதாரம்.	கோகர்ணேஸ்வரி உடனுறை மஹாபலேஸ்வரர் 06.00 - 12.30 05.00 - 08.15 P.V. தீக்ஷித், B.V. தீக்ஷித், தேர் வீதி கோகர்ணம் 08386- 257167, 08386 - 256 167

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி	தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
268	திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்) நிர்வாக அதிகாரி, துணை ஆணையர் ஸ்ரீ மல்லிகார்ஜுனேஸ்வரர் திருக்கோயில் ஸ்ரீ சைலம் கர்னூல் மாவட்டம் ஆந்திர மாநிலம் - 518100	கர்னூல் மாவட்டத்தில் நந்தியாலுக்கு அருகில் உள்ளது. ஹைதரபாத்திலிருந்தும் செல்லலாம்.தெனாலியிலிருந்து 250 கி.மீ. (விஜயவாடா அருகில் 27 கி.மீல் தெனாலி). விஜயவாடாவிலிருந்து 18 கி.மீ தொலைவில் மங்களகிரி பானகால நரசிம்மர் கோயில்.	ஜோதிர்லிங்கத்தில் ஒன்று. சக்தி பீடத்தில் பிரமராம்பாள் பீடம். அர்ச்சுனன் தலங்களில் ஒன்று(மருத மரம்). மற்ற இடங்கள் திருவிடை மருதூர் திருப்புடைமருதூர் (அம்பாசமுத்திரம் அருகில்) சிலாத முனிவர் தவம் செய்தது. சிவனைச் சுமக்கும் ஆற்றலை நந்திபெற்ற இடம். அவரே இங்கு மலையாக இருக்கிறார். 3 பாடல் பெற்ற ஜோதிர்லிங்கங்களில் ஒன்று. மற்றவை இராமேஸ்வரம், திருக்கேதாரம். சம்பந்தரும், சுந்தரரும் காளத்தியைத் தொழுத பின்னர் அங்கிருந்தே வடக்கு நோக்கி பாடினர். அப்பர் கயிலாய யாத்திரையில் எழுந்தருளிப்பாடினார். கிருஷ்ணா நதிக்கரையில் உள்ளது.இதுவே பாதாள கங்கை. 8 சிகரங்கள் உள்ளன. 9 கோயில்களும் உள்ளன.	பிரமராம்பிகை உடனுறை மல்லிகார்ச்சுனர் காலை 5 முதல் இரவு 10 மணி வரை தரிசனம். அலுவலகம் 08524 - 287130, ரூம் புக்கிங் 08524-287 135,நிர்வாகம் (08524-287159)
269	இந்திரநீலபருப்பதம் இந்திரநீலப்பருப்பதம் பத்ரிநாத் அடிவாரம் பத்ரிநாத் உத்திராஞ்சல் மாநிலம்	பத்ரிநாத்திலிருந்து தரிசிக்க வேண்டிய தலம்.	இந்திரனால் வழிபட்ட இமயமலைச்சாரல் தலம். சம்பந்தர் பாடியது. திருக்காளத்திக்குப்பிறகு அங்கிருந்தே பாடினார். பத்ரிநாத் கோயிலை இரவு அடைந்து அடிவாரத்தில் இரவு தங்கி விடியற்காலையில் 4 மணியளவில் எழுந்து பார்த்தால் பருப்பதத்தைப்பார்க்கலாம். நேரம் ஆக ஆக வண்ணம் மாறும். பனி மற்றும் மேக மூட்டம் இருப்பதால் கொடுப்பினை இருந்தால் தரிசனம் பெறலாம்.	நீலாம்பிகை உடனுறை நீலாசலநாதர்
270	அநேகதங்காபதம் அநேகதங்கபாதம் வழி ஹரித்வார் கேதார்நாத் வழி கௌரிகுண்டம் உத்திராஞ்சல் மாநிலம்	ஹரித்வாரிலிருந்து கேதார்நாத் செல்லும் வழியில் கௌரிகுண்டம் வரை பேருந்துசெல்லும். பின் குதிரைப்பயணம்.	அம்பிகை தவம் செய்த இடம். இங்குள்ள வெந்நீர் ஊற்றில் அவசியம் நீராட வேண்டும். சூரியனும் சந்திரனும் வழிபட்ட தலம். திருக்காளத்தியை வணங்கிய பின்பு அங்கிருந்தே சம்பந்தர் பாடியது.	மனோன்மணி உடனுறை அருள்மன்னேஸ்வரர்
271	திருக்கேதாரம் கேதாரேஸ்வரர் திருக்கோயில் கேதார்நாத் உத்திராஞ்சல் மாநிலம்	ஹரித்வாரிலிருந்து 250 கி.மீ. அக்டோபர் முதல் ஏப்ரல் வரை பனி மூட்டத்தால் கோயில் பூட்டப் பட்டிருக்கும். பருவ காலம் அறிந்து நடை திறக்கும் காலம் அறிந்து செல்ல வேண்டும். கேதார் செல்லும் வழியில் விஷ்ணுப் பிரயாகை, பாண்டுகேஸ்வர்,	6 மாத காலம் குளிர்காலத்தில் மூடியிருக்கும். ஜோதிர்லிங்க தலம்.பிருங்கி முனிவர் பொருட்டு உமையம்மை இறைவனை வழிபட்டுஇடப்பாகம் பெற்ற தலம். ஹரித்வாரிலிருந்து 250 கிமீ. 14 கிமீ மலையேறிச்செல்ல வேண்டும் குதிரையிலும், டோலியிலும் செல்லலாம். சம்பந்தர், சுந்தரர் திருக்காளத்தியில் இருந்த படியே பாடியது. கோயிலின் பின்புறம்	கேதாரகௌரி உடனுறை கேதாரேஸ்வரர்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
		ஹரித்வார் மற்றும் பத்ரிநாத் பார்க்க வேண்டிய தலங்கள்.
272	நொடித்தான்மலை (கயிலாயம்) மானசரோவர் திபெத் நாடு இமயமலை	திபெத்தில் மேற்குப்பக்கத்தில் உள்ளது.

கைலாய யாத்திரை

திபெத் நாட்டின் மேற்கில் 22028 அடி உயரத்தில் திருக்கைலாயம் உள்ளது. ஆண்டொன்றுக்கு 200-300 பேர்கள் ஜூன் முதல் செப்டம்பர் வரை செல்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரியில் இந்திய வெளியுறவுத் துறையினர் வெளியீட்டின் வாயிலாக விண்ணப்பம் செய்து தேர்வு செய்யப்படுவோர் குழுக்களாக உடல் நலம் சோதிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுவர். டெல்லி, மொராதாபாத், ராம்பூர், ருத்திரப்பூர் வழியாக தனக்பூர் என்னும் இமயத்தின் அடிவாரத்தை அடைய வேண்டும். மலையேற்றம் மூலம் சாம்பவாட், பித்தோர்காட் வழியாக தார்சுலா அடைய வேண்டும். காளத்தி நதியின் மேற்கரை இந்தியா மற்றும் கீழ்க்கரை நேபாளம் ஆகும். தார்சுலாவிலிருந்து தவாகாட் வரை 60 கிமீ சமதரைப் பேருந்துப் பயணம். தவாகாட்டிலிருந்து மலையேற்றம் நடைவழி 120 கிமீ. பாங்கு, சிக்கா, ஜிப்டி, மால்பா, புத்தி, குஞ்சி, கலாபானி வழியாக இந்திய எல்லை நபிதால் சேர வேண்டும். பின்னர் சீன எல்லையான லிபுவுள் சென்று தார்ச்சனை அடைய வேண்டும். பின்னர் 55 கிமீ மலையை வலம் வர வேண்டும். 3 நாட்கள் பிடிக்கும்.

273	திருக்கோணமலை திருக்கோணமலை இரயில் நிலையம் அருகில் இலங்கை	ரயில் மூலம் இலங்கை நாட்டுக் கொழும்பிலிருந்தும் யாழ்பாணத்திலிருந்தும் செல்லலாம். திருக்கோணமலை ரயில் நிலையத்திலிருந்து நடந்து போகலாம் .
274	திருக்கேதீச்சரம் வடக்கு இலங்கை மாந்தை	ராமேஸ்வரம் தலைமன்னார் கப்பல் வழி வந்துதலை

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
வெள்ளிப்பனி மலையாகக் காணக்கிடைக்காத காட்சி இருக்கிறது.	
சிவபெருமான் அம்பிகையோடு உடனாகி எழுந்தருளியுள்ள மலையாகும்.இமய மலையின் வடக்கில் திபெத்தில் மேற்கில் உள்ளது. இயற்கையான கோயிலமைப்பில் பனி மூடிய சிவலிங்கமாகக்காட்சி எப்பக்கத்திலிருந்தும் எவ்வண்ணமாக நோக்கினும் அவ்வண்ணமாகத் தெரியும். மலைச்சிகரம் தென்திசை நோக்கியுள்ளது. 29 மைல் சுற்றளவு. இந்தியாவில் இமயம் முதல் குமரி வரை எத்தனை வகையான கோபுரங்கள் உள்ளனவோ அத்தனை மாதிரி கோபுரங்களும் காணக்கிடக்கின்றன. அப்பர் இந்த யாத்திரையின் பயனாகவே ஐயாற்றில் கயிலைத்தரிசனம் பெற்றார். சுந்தரர் ஐராவதத்தில் கைலை சென்ற போது பாடினார். வருணனால் இப்பதிகம் திருஅஞ்சைக்களத்தில் சேர்ப்பிக்கப்பெற்று உலகிற்குக் கிடைத்தது. கயிலாய யாத்திரைக்கு இந்திய அரசு ஆண்டு தோறும் ஏற்பாடு செய்கிறது. சீன அரசும் வசதி செய்கிறது.	கொடியொன்றுடையார் உடனுறை கயிலைமலையார்.
3287 ஆண்டுப்பழமை வாய்ந்த தலம். திரிகூடம் என்பது மற்றொரு பெயர்.நகர சபையார் கிணறு தோண்ட முயன்ற போது மூன்றடி தோண்டிய நிலையில் இறைவன் கிடைக்கப்பெற்றார். ஆங்கிலேயரின் கெடுபிடியின்காரணத்தால் வழிபாட்டு அனுமதி பெற்று மலைப்பூசை ஆகாச வெளியில்இன்றும் நடைபெறுகிறது. 1624 போர்த்துகீயர் பாழ் செய்த கோயில். அதனை அருணகிரிநாதர் விளக்கியுள்ளார். அந்த கோபுரத்தழகைச்சிதைத்த தளபதி ஓவியம் வல்லானின் துணை கொண்டு படம் வரைந்த பிறகே சிதைத்தான். இந்த சித்திரம் விஸ்பன் நகரில் இன்றும் உள்ளது.	மாதுமையாள் உடனுறை கோணேஸ்வரர்
கேது பூசித்ததலம். பழைய கேதீஸ்வரம் 16-ஆம் நூற்றாண்டு புயலில் சிதைந்தது.	கௌரியம்பாள் உடனுறை


எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	மாந்தோட்ட நகர் இலங்கை	மன்னாரிலிருந்து இங்கே வரலாம். கொழும்பிலிருந்து மன்னார் வரை புகைவண்டியில் வந்து ஊரை அடையலாம்.
275	திருவிடைவாய் புண்ணியகோடிநாதர் திருக்கோயில் திருவிடைவாசல் திருவிடைவாசல் அஞ்சல் அத்திக்கடை எஸ்.ஓ. குடவாசல் தாலுகா திருவாரூர் மாவட்டம் - 613702	தஞ்சை மாவட்டம் கொரடாச்சேரியிலிருந்து கூத்தாநல்லூர் செல்லும் பாதையில் வெண்ண வாசலில் இருந்து 2 கி.மீ.தூரம் கிழக்கு பாண்டவை ஆறு தென்கரை அருகே ஊர்.
276	திருக்கிளியன்னவூர் கிளியனூர் திருக்கிளியன்னவூர் திருக்கோயில் கிளியனூர் போஸ்ட், வானூர் தாலுக்கா விழுப்புரம் மாவட்டம் -604102	புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட தலம். கிளியனூர் என்கிற ஊர் தண்டிவனத்திலிருந்து பாண்டி சாலையில் தென் கிழக்கே 18 கி.மீ தூரத்தில் உள்ளது.

தேவாரப் பதிகத் தொகைப்படி தலங்கள்

தல எண்ணிக்கை	பதிகங்கள்	மொத்தம்
153	ஒரே பதிகம்	153
49	2	98
28	3	84
11	4	44
7	5	35
7	6	42
4	7	28
4	8	32
11		233
274		**749**

சீர்காழி-71, திருவாரூர் 34, வீழிமிழலை 24, திருவையாறு 19, திருவதிகை18, திருவிடைமருதூர் மற்றும் கச்சியேகம்பம் 12, திருஆலவாய், சிதம்பரம் மற்றும் முதுகுன்றம்11, மறைக்காடு10. (கடைசியாக கிடைக்கப்பெற்ற சம்பந்தர் பாடிய 2 தலங்கள் நீங்கலாக)

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
இராசேந்திர சோழன்பின் சுந்தரபாண்டியன் திருப்பணி செய்த தலம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முயற்சியில் 1872 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது	திருக்கேதீஸ்வரர்
புதிதாகக் கிடைக்கப்பெற்ற தலம் (1917). சம்பந்தர் பாடியது.சிறிய கோயில். அற்புதமான சிற்ப வேலைகள் நிறைந்த கோயில். புண்ணியகோடி தீர்த்தம் உள்ளது. குருக்கள் முகவரி- சிவன்சன்னிதி தெரு, களத்தூர், கொரடாச்சேரி - 613703. குருக்கள் இங்கிருந்து தான் வர வேண்டும்.	அபிராமி உடனுறை புண்ணியகோடிநாதர் 10.30 முதல் 12.00 வரை ஒரு கால பூஜை வி.பாலசுப்ரமண்ய குருக்கள், S.வைத்தியநாத குருக்கள் 99436 66180
கிள்ளி என்பது பழங்கால சோழர் பெயர். அக்காலத்தில் கிள்ளியநல்லூர்என்பது மருவி கிளியனூர் ஆனது. சம்பந்தர் காலத்தில் செங்கல் கோயிலாக இருந்தது இடைக்கால சோழர் காலத்தில் கற்கோயிலானது. அகத்திய முனிவருக்கு அருள்பாலித்த பதி. ராகு கேது கிரகங்களுக்கும் அருள்பாலித்த இடம். காளவ மகரிஷி தன்னுடைய இரண்டு பெண் குழந்தைகளின் தீராத பிணிக்காக பல காலம் பூஜித்து தீராத பிணி தீர்ந்ததாக ஐதீகம். சுகப்பிரம்ம ரிஷி பூஜித்ததால் சுக(கிளி) புரி. அகத்தியர் பிரதிஷ்டை செய்த சுவாமி. மகாசிவராத்திரி அர்த்தஜாமத்தில் அம்பாளுக்கு எதிரே உள்ள நந்தி அம்பாளை பூஜை செய்வதாக வரலாறு. சுக முனிவருக்கு குன்ம வியாதி (வயிற்று வலி) தீர்த்த தலம். பாலய சுவாமிகளும் சிதம்பர சுவாமிகளும் வரும்போது நரை மூதாட்டியின் வேண்டு கோளுக்கிணங்க புற்கை அமுதை புசித்து, ஓராண்டு இருந்து ஆலய கர்ப்பக்கிரகம் கட்ட முற்பட்ட போது இம்மூதாட்டி 1 பொன் கொடுக்க, உள்ளம் உவந்து பொன்னை ஏற்று நெற்றியிலும், சிரசிலும், கண்ணிலும் வைத்து ஆனந்தமுற்று கர்ப்பக் கிரகத்தின் சிகர வேலைக்கு உபயோகித்தனர். இம்மூதாட்டியின் சமாதியும், இவர் அனுக்கிரகம் செய்த ஏகாலி பெண்ணின் சமாதியும் இன்றும் ஆராதிக்கப்படுகிறது.	அகிலாண்டேஸ்வரி உடனுறை ஸ்ரீ அகத்தீஸ்வரர் 09.00 - 12.00 05.30 - 07.30 பி. ஹரிஹர குருக்கள் 04147 - 235221 9976440754


கும்பகோணம்
சக்திமுற்றம்
பட்டீஸ்வரம்
திருவிசயமங்கை
திருவைகாவூர்
நல்லூர்
பாபநாசம்
திருப்பாலத்துறை
திருக்கருக்காவூர்
கொட்டையூர்
கவாமிமலை
ஆவூர்
திருவலஞ்சுழி
திருப்புறம்பியம்
திருவின்னம்பர்
திருவாய்பாடி
சேங்கனூர்
திருப்பனந்தாள்
திருவியலூர்
சென்னை
திருச்சி
திட்டை
தஞ்சாவூர்
சாலியமங்கலம்
60
9
32
கருவாய்க்கரை
கருக்குடி
கலையநல்லூர்
சிவபுரம்
மருதாநல்லூர்
வைகல்மாடக்கோவில்
தராகரம்
பழையாறைவடதளி
கருவிலி
பேணுபெருந்துறை
நாச்சியார்கோயில்
திருநல்லம்
கும்பகோணம்
16
சூரியனார்கோயில்
திருநரையூர்
அரிசிற்கரைபுத்தூர்
15
திருச்சேறை
நாலூர்மயானம்
உப்பிலியப்பன்கோயில்
அய்யாவாடி
திருநாகேஸ்வரம்
17
திருமங்கலக்குடி
திருக்கோடிக்காவல்
கஞ்சனூர்
ஆடுதுறை
திருமணஞ்சேரி
குத்தாலம்
மன்னார்குடி
நீடாமங்கலம்
எஸ். புதூர்
ஆலங்குடி
பேரளம்
கொல்லுமாங்குடி
மயிலாடுதுறை
திருவாரூர்
28
20
5
16


நவ கைலாய திருத்தலங்கள் வரைபடம்
பாபநாசம்
(சூரியன்)
①
30 km
சோமா தேவி கோவில்
② (சந்திரன்)
12 km
③
கல்லூர்
(செவ்வாய்)
14 Km
④
குன்னத்தூர்
(ராகு)
25 Km
முறப்பநாடு கோவில்
(குரு)
⑤
60 Km
தூத்துக்குடி
⑥
சோந்தபூமங்களம்
(சுக்கிரன்)
முறப்பநாடு
சேர்மாதேவி
55 Km
30 Km
ஸ்ரீவைகுண்டம்
(சனி)
⑨
10 Km
தென்திருப்பேரை
(புதன்) ⑧
6 Km
மணத்தி
(கேது) ⑦
20 Km

திருவாசக (1-2) மற்றும் திருவிசைப்பா திருப்பல்லாண்டு தலங்கள் (3-10)

1	ஆவுடையார் கோயில், திருப்பெருந்துறை ஆத்மநாதசுவாமி திருக்கோயில் ஆவுடையார் கோயில் மற்றும் போஸ்ட் ஆவுடையார்கோயில் வட்டம் புதுக்கோட்டை மாவட்டம் 614618	அறந்தாங்கி. மீமிசல் பாதையில், அறந்தாங்கியிலிருந்து 14 கிமீ தொலைவில் ஊர். பொதுவாக ஆவுடையார் கோயில் என்று வழங்கப்படுகிறது. திருச்சி-புதுக்கோட்டை, மதுரை-திருப்புத்தூர்-காரைக்குடி, தஞ்சை-பட்டுக்கோட்டை ஆகிய வழிகளில் அறந்தாங்கி செல்லும் பாதையில் ஊர்.

திருவிசைப்பா திருப்பல்லாண்டு தலங்கள் சிவபெருமானின் மேனிச் சிறப்பு, அடியார்க்கு அருளல், வைச சமய சித்தாந்த கருத்துக்கள் கொண்டவை.

2	உத்திரகோசமங்கை மங்களேசுவரர் திருக்கோயில் உத்திரகோசமங்கை மற்றும் போஸ்ட் இராமநாதபுரம் வட்டம் மற்றும் மாவட்டம் 623533	மதுரை - இராமநாதபுரம் சாலையில் பரமக்குடி, சத்திரக்குடி தாண்டி வலப்புறம் செல்லும் தூத்துக்குடி- திருச்செந்தூர் பாதையில் உத்திரகோசமங்கை, லெவல் க்ராஸிங் தாண்டி 7 கிமீ சென்றால் ஊர். இந்த ஊர் இராமநாதபுரத்திற்கு சுமார் 10 கிமீ முன்பாகவே உள்ளது.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
ஆத்ம லிங்க வடிவில் அருவ நிலையில் இறைவன். இக்கோவிலில் அர்ச்சகர் நம்பியார், குருக்கள், சைவப்பிள்ளை என்று மூன்று வகையினர் உள்ளனர். முறைப்படி பணி செய்கிறார்கள். தெற்குப்பார்த்த கோவில். நந்தி, கொடிமரம் இல்லை. சுவாமி அம்பாளுக்கு உருவம் இல்லை. பரிகார தலம். மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் உபதேசம் செய்த கோவில். ஆதலால் தெற்கு நோக்கி சிவபெருமான். அரிமர்த்தன பாண்டியன் சொல்படி அமைச்சர் வாதவூரார் கீழ்க் கடற்கரைக்கு குதிரை வாங்க சென்றவர், குருந்த மரத்தின் கீழ் இறைவன் ஆட்கொண்டு மாணிக்கவாசகராக மாறினார். இறைவன் ஆணைப்படி அவரே கோயில் கட்டியதாக வரலாறு. கொடுங்கைகளின் அழகு பெற்ற கோயில் சிற்பங்கள் சிறிய மடிப்புகளாகக் இழைக்கப்பட்ட கருங்கற்கள் விசேஷம். ஸ்தபதிகள் கோயில் கட்டும்போது தங்கள் திறமைக்கு பங்கம் வரக்கூடாது என எண்ணி, கொடுங்கைகள் நீங்கலாக வேலை பார்ப்போம் என்று ஒப்பந்தம் செய்வார்களாம். வீடுபேறு பெற பெரும் துறையாக விளங்குவதால் இப்பெயர்.	யோகாம்பாள் உடனுறை ஆத்மநாதசுவாமி 06.00 - 12.30 04.00 - 08.30 நம்பியார், குருக்கள், சைவப்பிள்ளை என மூன்று வகையினார் பணி பார்ப்பார்கள் கண்காணிப்பாளர் 04371 - 233301 மாணிக்க வாசகர் பாடிய தலம்.
மங்களநாதர், மங்களேஸ்வரி மற்றும் மரகத நடராஜர். ஐந்தரை அடி உயரமுள்ள ஒரே கல்லினால் (மரகதப்பச்சை) ஆன மரகத நடராஜர் வருடம் ஒரு முறைதான் அபிஷேகம். ஆருத்ரா தரிசனம், மார்கழி திருவாதிரை மட்டும் மற்ற நாட்களில் ஸ்படிக லிங்க பூஜை மட்டும் தான். உச்சி கால வேளையில் ஸ்படிக மற்றும் மரகத லிங்கத்திற்கும் நடைபெறும் அபிஷேகம் மாணிக்கவாசகரே செய்வதாக ஐதீகம். இவர் சடையுடன் தனிச்சன்னிதியில் காட்சி தருகிறார். சிவபெருமான் பார்வதிக்கு வேத மந்திரத்தை உபதேசித்துவிட்டுத் திருப்பிக்கேட்கும் போது அன்னை மறந்ததால் மண்ணுலகில் புகலூரில் பிறந்து பின் அந்தணராக சிவன் மணந்தார். மணந்தபின் மீண்டும் வேத மந்திரத்தை உபதேசித்தாராம். உத்திரம்-பதில், கோசம் -	மங்களேஸ்வரி உடனுறை மங்களநாதர் மரகத நடராஜர் - இரத்தின சபாபதி மற்றும் ஆதி சிதம்பரேசர். 06.00 - 12.30 04.00 - 08.30 பேஷ்கார் கோ. சேகர் 04567-221213 இராமநாதபுரம் திவான் சமஸ்தானம் (தலைமை அலுவலகம்), சேகர்- 04567-256333, 9976228866 மாணிக்க வாசகர் பாடிய தலம்.

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
3	கங்கைகொண்டசோழபுரம் கங்கைகொண்ட சோழேஸ்வரர் திருக்கோயில் கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் போஸ்ட் உடையார்பாளையம் வட்டம் திருச்சி மாவட்டம் 612901	ஜெயங்கொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 10 கிமீ தொலைவில் ஊர். சென்னை- பண்ருட்டி-சேத்தியாத்தோப்பு பாதையில் மீன்சுருட்டி அடைந்து, திருச்சிக்குப் பிரியும் சாலையில் 2 கிமீல் ஊர். கும்பகோணத்திலிருந்தும் கல்லணைப் பாதையிலும் (லோயர் அணைக்கட்டு) வரலாம்.
4	திருவிடைக்கழி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் திருவிடைக்கழி அஞ்சல் தரங்கம்பாடி வட்டம் நாகப்பட்டணம் மாவட்டம் 609310	மயிலாடுதுறையிலிருந்து தில்லையாடி சென்று, வள்ளியம்மை பெயரில் அமைந்த வளைவுக்குள் சென்று பின் 3 கிமீல் ஊர்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
வேதம் என்ற பொருளில் ஊரின் பெயர். வெளிப்பிரகாரத்தில் ஆதி சிதம்பரம் என்ற தனிக்கோயிலில் பதஞ்சலிக்கும், வியாக்ர பாதருக்கும், காரைக்காலம்மையாருக்கும் காட்சி கொடுத்தார். இங்கிருந்துதான் நடராஜர் சிதம்பரத்தில் ஆடச்சென்றதாகக் கூறுவர். இதற்குரிய சுரங்கப்பாதையும் இருந்ததாம். மாணிக்கவாசகர் இந்தத்தலத்தின் மகிமைகளைக் கூறுகிறார். பிருகு, சாண்டில்யர், அக்கினி வழிபட்ட தலம். பல்லாயிரம் ஆண்டு கடந்து இலந்தை மரம் உள்ளது	
இராஜேந்திர சோழன் தந்தையைப்போல் பெரிய (60 அடி சுற்றளவுள்ள ஆவுடையார், 13 அடி உயரம்) கொண்டு சிவலிங்கம் அமைத்த தலம். பெருத்த மழையினால் கொள்ளிடத்தில் ஏற்படும் வெள்ளம், தஞ்சையைத் தலைநகராகக் கொண்டதால், தில்லை நடராஜரை வழிபட தடையாக உள்ளது என எண்ணி, அவன் படையினர் வடநாட்டில் போர் புரிந்து கங்கை நீர் கொணர்ந்து இவ்விடத்தைப் புனிதப்படுத்தி கோயில் அமைத்தான். கலிங்கத்துப் பரணி பாடப்பட்ட ஊர். சேக்கிழார் பெரிய புராணம் பாட உந்துதல் தந்த ஊர். மூலவர் அடியில் சந்திரகாந்தக்கல் பதிக்கப்பட்டு இருப்பதால் வேனிற்காலத்தில் மூலவர் குளிர்ச்சியாகவும் பனிக்காலத்தில் வெப்பமாகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் உள்ளன.	பெரியநாயகி உடனுறை பிரகதீஸ்வரர் 06.00 - 12.00 04.00 - 08.00 வி.தியாகராஜ குருக்கள் 9443368575 கருவூர்த்தேவர் திருவிசைப்பா பாடிய தலம்.
முருகன் தலமாக விளங்குகிறது. தெய்வயானை இறைவனிடம் திருப்பரங்குன்றம் விடை கேட்டதாலும், முருகன் இரணியாசுரனைக் கொன்ற பழி கழித்ததால் விடைக்கழி எனப் பெயர். சேந்தனார் முக்தித் தலம். பிரதானமாக முருகப்பெருமானும், உள்ளடங்கி சிவலிங்கமும் உள்ளது. மலைகளில் மட்டுமே வளரும் குராமரம் இங்கு இருப்பது அபூர்வம் என்றும் முருகப் பெருமான் இங்கு அமர்ந்து தியானம் செய்ததால் இங்கு தியானம் செய்வது விசேஷம்.	காமேஸ்வரி உடனுறை காமேஸ்வரர் 06.30-11.30 05.00-07.30 பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார் கணேசன் (9442012133) திருக்கடவூர் மயானம் குருக்கள் சேந்தனாரின் திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி	தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
5	இராஜராஜேஸ்வரம் பிருகதீஸ்வரர் திருக்கோயில் (தஞ்சை பெரிய கோயில்) தஞ்சாவூர் தஞ்சை 1	சென்னை ராமேஸ்வரம் இருப்புப் பாதையில் உள்ள ரயில் நிலையம். நகரத்தின் பிரதான பகுதியில் கோயில்.	தஞ்சகன் ஆண்ட ஊர். முதலாம் இராஜராஜன் தன் 25 ஆண்டு ஆட்சி நிறைவைக்குறிக்கும் வகையில் கட்டிய கோயில். நிழல் விழாத கோபுரம், பெரிய ஆவுடையார், பெரிய நந்தி (ஒரே கல்) , 80 டன் இடையுள்ள பெரிய கல் தாங்கிய கோபுரம். இந்தக் கல்லில் ஒரு மாட்டு வண்டி சுற்றி வரும் அளவுக்கு இடம் உண்டு. சிவலிங்கத் தீர்த்தத்தில் நீர் குறைந்திருக்கும் போது பெருமான் தெரிவார். இது ஓர் வைப்புத் தலம். அஷ்டபந்தனம் ஆவுடையாரையும் பாணத்தையும் இணைக்காமல் இளகவே கருவூர்த்தேவர் தன் வாயில் உள்ள தாம்பூலத்தை உமிழந்து மருந்தாக்கி சேர்த்ததாக வரலாறு. தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் பராமரிக்கப்படுகிறது. சாரப்பள்ளம் என்கிற ஊரிலிருந்து இக்கோயிலுக்கும் சாரம் கட்டப்பட்டதாம். முதல் தளத்தின் உட்சுவற்றில் உள்ள 108 கரணங்கள் பிரசித்தம். அருகே சரஸ்வதி மகால் என்னும் ஓலைச்சுவடி பாதுகாப்பு மையம் உள்ளது.	பிருகன்நாயகி உடனுறை பிருகதீஸ்வரர். 06.00 - 12.30 04.00 - 08.30 துணை ஆணையர், பொருளாளர்,மேல வீதி அரண்மனை கோயில் தேவஸ்தானம், இந்து அறநிலையத்துறை, தஞ்சை-1 04362-274476 கருவூர்த் தேவர் திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.

அமர்நாத் யாத்திரை

பனி லிங்கமாகக் காட்சி தரும் அமர்நாத் குகையில் பெருமானை தரிசிக்க உகந்த காலம் ஜூலை முதல் வாரத்திலிருந்து செப்டம்பர் 15 வரையாகும். ஸ்ரவண பௌர்ணமி விசேஷம் (ஜூலை-ஆகஸ்ட் மாதம்). இறைவன் பார்வதியினை மணந்து இவ்வாறு தன்மையினை விளக்கும் அமரகதையை இறைவிக்கு இத்தலத்தில் விளக்கியதாக ஐதீகம். இதை ஒட்டுக் கேட்டு புறாக்கள் சாகா வரம் பெற்றதாக வரலாறு. அப்புறாக்களைக் காண்பதால் நல்லன நடக்கும் என்றும் கூறுவர். 3962 அடி உயரத்தில் இரண்டடி நீளமும், 55 அடி அகலமும் மற்றும் 50 அடி ஆழமும் நிறைந்தது இக்குகை. பஹல்காமிலிருந்து அமர்நாத் 47 கிமீ. இது 4 நாட்கள் பிடிக்கும். பஹல்காம் ஸ்ரீ நகரிலிருந்து (காஷ்மீர்) 96 கிமீல் உள்ள சுற்றுலா மையம். பஹல்காமிலிருந்து சந்தன்வாரி, சேஷ்நாக், பஞ்ச்தரணி வழியாகச் செல்ல வேண்டும். இந்த 3 இடங்களிலும் இரவு தங்கி செல்ல வேண்டும். ஸ்ரீநகரிலிருந்து சோனாமார்க் (84 கிமீ) மார்க்கமாகவும் அமர்நாத்தை அடையலாம். பால்தாலிலிருந்து இத்தலத்தை அடைய 16 கிமீ மலையேற்றம். தற்போது பஹல்காமிலிருந்து (2130 மீ) சந்தன்வாரி (2895 மீ) வரை சாலை மார்க்கமாக ஜீப் மூலம். அடையலாம். இது 16 கிமீ. குதிரை சவாரியும் உள்ளது. சந்தன்வாரியிலிருந்து சேஷ்நாக் 11 கிமீ. சேஷ்நாக்கிலிருந்து (3574 மீ) பஞ்ச்தரணி 13 கிமீ மற்றும் பஞ்ச்தரணியிலிருந்து அமர்நாத் 7 கிமீ. இவை மூன்றும் குதிரையில் செல்ல வேண்டும்.

6	சாட்டியக்குடி வேதபுரீஸ்வரர் திருக்கோயில் சாட்டியக்குடி - கிள்ளுக்குடி அஞ்சல், வழி தேவூர் திருவாரூர் வட்டம் மற்றும் மாவட்டம் 611109	கீழ்வேளூரிலிருந்து (கீவளூர்) கச்சனம் வழியாக திருத்துறைப்பூண்டிக்குச் செல்லும் பாதையில் ஊர். திருவாரூர் - தேவூர் பாதையில், தேவூரை அடுத்து இந்த ஊர்.	ஏழிருக்கை என்று பெயர் பெற்ற ஊர். ஆறு ஆதாரங்களுக்கு மேல் ஏழாவது இடமான துவாதசாந்த இருக்கை பெற்ற ஊர். சாட்டிய (சாண்டில்ய) முனிவர் வழிபட்ட தலம். ஜாட்டியம் வெப்ப மிகுதியால் வரும் ஜ்வரம், ஜ்வரதேவதையாக இறைவனை வழிபட்ட தலம் ஜாட்டியக்குடியானது. வெப்ப நோயை நீக்கும் தலம். நான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஊர். மேற்கு பார்த்த சந்நிதி. தேவூர் தேவபுரீஸ்வரர் சுவாமி கோயில். குரு ஸ்தலம். குபேரன், குரு வணங்கிய தலம்.	வேதநாயகி உடனுறை வேதபுரீஸ்வரர் 06.00-12.00 04.00-08.00 எஸ். வெங்கடேச குருக்கள் 04366-276113, 9486278810 ஜி. தியாகராஜ குருக்கள் 94424 46077 கருவூர்த்தேவரின் திருவிசைப்பா பாடல் பெற்ற தலம். மாணிக்க வாசகர் பாடல் பெற்றது.
7	திருமுகத்தலை பன்னத்தெரு பன்னகாபரணேஸ்வர சுவாமி திருக்கோயில் பன்னத்தெரு, மாராச்சேரி அஞ்சல் (வழி) பாமணி திருக்குவளை வட்டம் நாகை மாவட்டம் 614711	திருத்துறைப்பூண்டி நாகை-வேளாங்கன்னி பாதையில் 4 கி.மீ தூரத்தில் கொக்காலடி என்னும் ஊரை அடைந்து, மாராச்சேரி பாதையில் (மானாச்சேரி) 3 கி.மீ	ஆதிசேடனுக்கு குஷ்டம் நீக்கிய தலம். மஹா கால பைரவர் தலம். நளன், தமயந்தி, ஸ்ரீ சனீஸ்வர பகவான் அனுக்கிரகம் பெற்ற தலம். எதிர்ப்பக்கம் சூர்ய தீர்த்தம். பண்டை காலத்தில் முகத்தலைலிங்கம் அமைந்த தலமாதலால் இப்பெயர். மதுரை ஆதீனக் கோயில்.	சாந்தநாயகி உடனுறை பன்னகாபரணேஸ்வரர் 06.00-12.00 04.00-08.00 ர.கௌரிசங்கரகுருக்கள், வே.ஆறுமுகம் மேலாளர் 04366-247490 04369-220983 (தி.து.பூண்டி)

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
		ஊர். மன்னார்குடியிலிருந்தும் வரலாம்.
8	கீழ்கோட்டூர் மணியம்பலநாதர் திருக்கோயில் கீழ்கோட்டூர் கோட்டூர் அஞ்சல் (வழி) திருத்துறைப்பூண்டி மன்னார்குடி வட்டம் திருவாரூர் மாவட்டம் 614708	திருத்துறைப்பூண்டி-மன்னார்குடி பாதையில் , திருப்புத்தூர் பாலம்தாண்டி 1 கிமீ தூரத்தில் மேலக் கோட்டூர் உள்ளது. இந்தக் கோயில் வளைவைத் தாண்டி உள்ளே சென்றால் கீழ்க் கோட்டூர் மணியம்பலம். பாதுகாப்பு நலன் கருதி கோயில் நேரம் மிகவும் நேர்த்தியாக கடைபிடிக்கப்படுகிறது. மன்னார்குடியிலிருந்து வரும்போது திருவண்டுதுறையை தரிசித்துவிட்டு பின் கோட்டூரைதரிசிக்கலாம்.
9	களந்தை ஆதித்தேச்சரம் களப்பால், கோயில் களப்பால் அழகியநாதசுவாமி திருக்கோயில் கோயில் களப்பால் நடுவக் களப்பால் அஞ்சல் (வழி) திருத்துறைப்பூண்டி திருவாரூர் வட்டம் 614710	மன்னார்குடியிலிருந்து வரும் போது திருப்பத்தூர் அடைந்து வலப்பக்கம் திரும்பி மீனம்பநல்லூர் வழி பிடித்து 9 கிமீ தூரம் சென்றால் ஊர். இதைத்தாண்டி திருக்களர் தலம் உள்ளது. அங்கிருந்து சங்கேந்தி பாதையும், திருத்துறைப் பூண்டி பாதையும் உள்ளது. இது 12 கிமீ தூரம். திருப்புத்தூர் வளைவில் இருந்து சுமார் 4 கிமீ திருக்களர்.
10	திருலோக்கி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருலோக்கி அஞ்சல் (வழி) துகிலி எஸ். ஒ திருவிடைமருதூர் வட்டம் தஞ்சை மாவட்டம் 609804	திருப்பனந்தாளிலிருந்து தென்கிழக்கில் 5 கிமீலும், துகிலியிலிருந்து வடமேற்கில் 5 கிமீ. திருமங்கலக்குடி, சூரியனார் கோயில் மற்றும் கஞ்சனூருக்கு அருகில் உள்ளது. அருகே ஸயன கோலத்தில் க்ஷீராப்தி சயன நாராயணப் பெருமாள் திருக்கோயிலும் உள்ளது.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
கருவூர்த்தேவரின் திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.	
பிரமன், ஐராவதம் வழிபட்ட தலம் மேலக்கோட்டூர் திருமுறைத்தலம். ஐராவதம் மேலக்கோட்டூரிலும் வழிபட்டது. அதன் மணி இங்கு விழுந்ததால் மணியம்பலமானது.	மணியம்பலநாயகி உடனுறை மணியம்பலநாதர். 05.00 - 11.30 05.00 - 08.30 மீனாட்சி சுந்தரம் குருக்கள்(மேலக்கோட்டூர்) 04367-279791 கருவூர்த்தேவர் பாடல் பெற்றது சங்கரநாராயணன் குருக்கள் 98435 82661
கூற்றுவ நாயனாருக்கு பாதமுடி சூட்டிய தலம். மாடக்கோவில்களில் ஒன்று திருக்களந்தை ஆதிச்சேஸ்வரம். களப்பாளர் கோத்திரத்தைச் சேர்ந்தவர் வாழ்ந்த ஊர். ஆதித்த சோழன் கட்டியதால் இப்பெயர். விரைவில் திருப்பணி நடக்க உள்ளது.	பண்ணேர் மொழியாள் உடனுறை அழகியநாதசுவாமி 09.00-10.00 04.00-07.00 கே.விஸ்வநாத குருக்கள் 93801 32719, 04367-277279 கருவூர்த்தேவர்திருவிசைப்பா பாடல் பெற்ற தலம்.
ராஜராஜசோழன் காலத்துக்கோயில். குருபகவானே ரிஷபாரூடரைக் கைகூப்பி தொழுது நிற்பதால் தடைபட்ட திருமணம், மக்கட்பேரும், மாங்கல்ய தோஷமும் நீங்கும் தலம். குரு மறைந்திருந்தாலோ பகை வீட்டில் இருந்தாலோ தோஷம் நீங்கும் தலம். குரு பகவானின் பாவம் நீங்க திருவிடைமருதூரின் ஈசான்யத்தில் உள்ள திரை லோக்கிய சுந்தரனை வழிபட சிவன் பணித்த தலம். அவ்வாறே பாபம் நீங்கி இறைவியை ஆலிங்கனம் செய்து தேவர் புடை சூழ ரிஷபாரூடனாக காட்சி தரும் அதிசயத்தலம். எரிந்த மன்மதனைஇங்கு வந்து வணங்கப் பணித்து மீண்டும் உயிர்பித்து ரதிக்குக் கொடுத்ததாக வரலாறு. ஆதலால் மாங்கல்ய தோஷ நிவர்த்தித்தலம். இதே போல் திருச்சி அருகே உள்ள லால்குடிக்கு சமீபத்தில் பூவாளூர் தலத்திலும் இதே தலக்குறிப்பு உள்ளது. சுகேதுவுக்கு தீராத தலைவலி நீக்கிய தலம்.	அகிலாண்டேஸ்வரி உடனுறை சுந்தரேஸ்வரர் 07.30-12.30 04.00-08.00 ஆலால சுந்தரர்(சுந்தரேஸ) சிவாச்சாரியார் 9360769884 94429 32145 கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பா பாடல் பெற்ற தலம். பிரகஸ்பதி, கருவூர்த்தேவர், பிருகு, சுகேது, தருமன் வணங்கிய தலம்.

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	ஜோதிர்லிங்கங்கள்- 12	
1	சௌராஷ்ட்ரம் (சோமநாத்) ஸ்ரீசோமநாதீஸ்வரர் தேவஸ்தானம் விராவல் குஜராத்	சென்னை -அஹமதாபாத் நவ்ஜீவன் எக்ஸ்ப்ரஸ் 2 நாள் பகல் மற்றும் 1 நாள் இரவுப் பயணம். அஹமதாபாத்தில் இருந்து ராஜ்கோட் மார்க்கத்தில் சென்றால் விராவல் ரயில் நிலையம். (500 கிமீ) அங்கிருந்து 5 கிமீ தூரத்தில் உள்ள தலம் இது. ராஜ்கோட்-விராவல் 186 கிமீ.
	ஜோதிர்லிங்க ஸ்லோகம் சௌராஷ்ட்ரே சோமனாதம்ஞ்ச ஸ்ரீஸைலே மல்லிகார்ஜுனம் உஜ்ஜெய்ன்யாம் மஹாகாளம் ஓம்காராம் அமலேஸ்வரம் ப்ரஜ்வல்யாம் வைத்யநாதாஞ்ச டாகின்யாம் பீமாஸங்கரம் ஸேது பந்தேது ராமேஸும் நாகேஷம் தாருகாவனே வாரணாஸ்யாந்து விஸ்வேஸும் த்ரயம்பகம் கௌதமீதே ஹிமாலயேது கேதாரம் க்ருஸ்ணேஸும்ஞ்ச விஸாளகே	
2	ஸ்ரீ சைலம் ஸ்ரீ மல்லிகார்ஜுனேஸ்வர ஸ்வாமி தேவஸ்தானம் ஸ்ரீ சைலம் கர்னூல் மாவட்டம் 518100 ஆந்திரப் ப்ரதேசம்	நந்தியாலிலிருந்து 117 கிமீ. ஹைதராபாத்திலிருந்து 6 மணி நேர பஸ் பயணம். தெனாலியிலிருந்து 250 கிமீ. தெனாலி சென்னை விஜயவாடா நெடுஞ்சாலையில் விஜயவாடாவிற்கு 27 கிமீ முன்னதாக உள்ளது. குண்டூர் விஜயவாடாவிலிருந்து 33 கிமீ. இங்கிருந்தும் செல்லலாம். மலை மேல் கோவில். 50 கிமீ மலைப்பாதைப் பேருந்துப் பயணம்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
கடற்கரையில் அமைந்துள்ள ஊர். பிரபாஸபட்டணம் எனப்பெயர். அருகே திரிவேணியில் கபில மற்றும் ஹிரண்ய நதிகள் சங்கமம். அந்தர் வாஹினியாக சரஸ்வதி, வ்ராஜனி மற்றும் நெங்கு நதிகள் சங்கமம். சோமநாதம் கஜினி முகமது படையெடுப்பில் தாக்குண்ட கோயில். இந்த 3 அடி லிங்கம் பிற்காலத்தில் மாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. கிருஷ்ணன் வேடனால் அம்பிடப்பட்டு கொல்லப்பட்ட இடம் உள்ளது. சுமார் அரை கிமீ தூரத்தில் சொர்க்காரோஹனத்தின் அருகில் குகையில் பாம்பின் சிலை உள்ளது. ஆதிசேஷன் பலராமராகப் பிறந்து சரீரத்தைத் துறந்த இடம். பீமேஸ்வரர் (சுயம்பு) , சிவன் அகல்யாபாய் கோவில்களும் மற்றும் அருகில் தப்தோத்க சுவாமி நாராயணர், சித்தேஸ்வரம் ஆகியவை உள்ளன. எதிரே அரச மரத்தின் கீழ் பாண லிங்கம், 5 முகங்களுடன் சோமநாத சிவலிங்கமும் சுரங்கக் கோவிலில் உள்ளன. கிழக்கே காளீஸ்வரர் சிவலிங்கமும் அகல்யாபாயி நிறுவிய சிவலிங்கம் மேல்தட்டிலும் உள்ளது.	ஸ்ரீ சோமநாதீஸ்வரர் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை இடைவிடாது தரிசனம். தங்கும் வசதிக்கு ஸ்ரீ சோம்நாத் ட்ரஸ்ட்சோம்நாத் ப்ரபாஸ்பதன் 362 268 ஜுனாகட் மாவட்டம் 02876 - 231212 திலீப் சாவ்தா 94282 14901 02876-231200 98242 85667
சக்தி பீடத்தில் பிரமராம்பாள் பீடம். கழுத்து பாகம் விழுந்த இடம் (மாதவி பீடம்) அர்ச்சுனன் தலங்களில் ஒன்று(மருத மரம்). மற்ற இடங்கள் திருவிடைமருதூர் திருப்புடைமருதூர் (அம்பாசமுத்திரம் அருகில்) சிலாத முனிவர் தவம் செய்தது. சிவனைச் சுமக்கும் ஆற்றலை நந்தி பெற்ற இடம். அவரே இங்கு மலையாக இருக்கிறார். 3 பாடல் பெற்ற ஜோதிர்லிங்கங்களில் ஒன்று. மற்றவை இராமேஸ்வரம், திருக்கேதாரம். சம்பந்தரும், சுந்தரரும் காளத்தியைத் தொழுத பின்னர் அங்கிருந்தே வடக்கு நோக்கி பாடினர். அப்பர் கயிலாய யாத்திரையில் எழுந்தருளிப் பாடினார். கிருஷ்ணா நதிக்கரையில் உள்ளது. இதுவே பாதாள கங்கை. 8 சிகரங்கள் உள்ளன. 9 கோயில்களும் உள்ளன. அருணாசுரனை வண்டு	ஸ்ரீ மல்லிகார்ஜுனேஸ்வர ஸ்வாமி ஸ்ரீ ப்ரமராம்பிகை காலை 5 முதல் இரவு 10 மணி வரை தரிசனம். நிர்வாக அதிகாரி, துணை ஆணையர் அலுவலகம் 08524 - 287130 ரூம் புக்கிங் 08524 -287135 நிர்வாகம் 08524-287159

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	மகா நந்தி நந்தியால் 518502	நந்தியால் ஊர் நந்தியின் பெயரில் திகழ்கிறது. நவ நந்தி க்ஷேத்திரத்தில் இவ்வூரைச் சுற்றி 9 கோவில்கள் உள்ளன.
3	த்ரயம்பகேஷ்வர் ஸ்ரீ த்ரயம்பகேஷ்வர் தேவஸ்தானம் நாஸிக் வழி த்ரயம்பகேஷ்வர் நாஸிக் மாவட்டம் 422 212 மஹராஷ்ட்ரம்	மும்பாய் - ஷீரடி மார்க்கத்தில் உள்ள ஊர் நாசிக். நாசிக்கிலிருந்து 29 கிமீ தூரத்தில் உள்ளது த்ரியம்பகேஷ்வர். பூனாவிலிருந்து நாசிக் சுமார் 200 கிமீ தூரம். 5 மணி நேர பேருந்துப் பயணம். நாசிக்கிலிருந்து தனிப் பேருந்தில் த்ரயம்பகேஸ்வர் செல்ல வேண்டும். நாஸிக் ரோடு இரயில் நிலையத்திலிருந்தும் வரலாம்.ராமர் வனவாசம் செய்த பஞ்சவடி க்ஷேத்திரமும் நாசிக்கிற்கு அருகில் உள்ளது.
4	உஜ்ஜயினி (அவந்திகா) ஸ்ரீ மஹாகாளேஸ்வரர் திருக்கோயில் உஜ்ஜயினி 456001 மத்தியப் பிரதேசம்	போபாலிற்கு மேற்கே 185 கிமீ. போபால் சென்னை புது டெல்லி ரயில் மார்க்கத்தில் உள்ள ஊர். சென்னையிலிருந்து 1701 கிமீ.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
வடிவம் கொண்டு அழித்தமையால் அம்பாளுக்கு இப்பெயர். (பிரமரம் -வண்டு). கிருஷ்ணா நதி பாதாள கங்கை கோவிலிலிருந்து 3 கிமீ. மருத மரவிருக்ஷத்தின் அருகில் ஸஹஸ்ர லிங்கமும், கணபதி புல்லாங்குழல் வாசிக்கும் வடிவிலும் வழியில் சாட்சி விநாயகரும் பார்க்க வேண்டியவை.	
கோதாவரியின் உற்பத்தி ஸ்தானம். மலையில் 721 படிகளின் மேல் ஓர் நந்தியின் வாயிலிருந்து சிறிய துளிகளாக விழுந்து தேங்கி மலையில் நதியாக பெருக்கெடுக்கிறது. கோதாவரி அம்மன் தெய்வமும் உள்ளது. கௌதமர் ஆஸ்ரம குகை, கோரக்நாத் குகை, இறங்கும் வழியில் ராம மற்றும் லக்ஷ்மண குண்டம், கௌதம குண்டம் உள்ளன. சுற்றிலும் சிவலிங்கங்கள் உள்ளதால் குளத்தின் பெயர் கோடி தீர்த்தம். மேற்கில் பள்ளி கொண்ட பெருமாளின் திருவடியில் நீர் துளசி மணத்துடன் உள்ளது. பிரம்மா, விஷ்ணு சிவனின் அம்சமாக மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளதால் த்ரியம்பகம். (முக்கண்). தொட்டு பூஜை செய்யக்கூடிய சிவலிங்கத்தின் அடியில் நீர் ஊற்று.எண்ணற்ற மூர்த்தங்கள் உள்ள கோயில். அருகே உள்ள வாங்கானேரிலிருந்து 1 கிமீல் ரத்தன் குன்றில் பூர்ணா தேவியும், நீல பர்வதத்தில் தத்தாத்ரேயர் மற்றும் கால பைரவர் கோயில்களும், நீலாம்பிகைக்கோயில்களும் உள்ளன.	ஸ்ரீ த்ரயம்பகேஷ்வர் காலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை இடைவிடாது தரிசனம். சீஃப் எக்ஸிக்யூடிவ் ஆபிசர் ஜில்லா பரிஷத் 0253-2596957
முக்தி தரும் க்ஷேத்திரம் ஏழில் ஒன்று (அவந்திகா). பூமிக்கு அடியில் குகைக்குள் மகாகாளேஸ்வரர். மேல்தட்டில் ஓங்காரேஸ்வரர். 3வது தட்டில் தாரகேஸ்வரர். 12 ஆண்டுக்கு ஒரு முறை கும்ப மேளா வைபவம் நடைபெறுகிறது. சிதாபஸ்மம் என்னும் மயானச் சாம்பல் இறைவனுக்குச் சாற்றப்படுகிறது. சக்தி பீடத்தில் முழங்கை விழுந்த இடம். ஆதி சங்கரர் ஸ்ரீ சக்ரம் பிரதிஷ்டை	ஸ்ரீ மஹாகாளேஸ்வரர் ஸ்ரீ உஜ்ஜயினிகாளி (மஹாகாளி) காலை 03.00 மணி முதல் இரவு 10.30 வரை. டெம்பிள் அட்மினிஸ்டேரர் 0734 - 2557725,

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி

ஜோதிர்லிங்கங்கள்

ஹிமாலயப் பள்ளத்தாக்கில் உள்ள சக்தி பீடம் ஜ்வாலாமுகி என்பது. இங்கு தொடர்ந்து நெருப்பு எரிந்து ஒளிவீசுகிறது. அதேபோல் பரமசிவன் 12 தலங்களில் ஜோதி வடிவமாக விளங்கி அருள் பாலிக்கிறார். இந்த சூக்ஷ்ம ஒளியினாலும் ஒளி வட்டத்தினாலும் பக்தர்களுக்கு அவன் இரண்டில் கடற்கரையிலும், மூன்றில் நதிக்கரையிலும், நான்கில் மலைகளிலும் ஏனைய மூன்றில் சமவெளியிலும் அருள்கிறார்.

சூரியனாகவும், நெருப்பாகவும், ஒளியாகவும் அக்னி வடிவமாக விளங்குவதாலும் ஜோதிர்லிங்கத்தின் புனிதத்தை தன்னுள் அடக்கியுள்ளதாலும் மஹாதேவன் என்கிற பெயர் பெற்ற சிவபெருமான் ருத்ர தாண்டவம் ஆடிய போது விழுந்த ஒளிப்பிழம்புகளே இந்தத் தலங்கள். அறியாமை என்னும் இருளைப்போக்கி நன்மை, வாழ்வில் மங்களம், நல் ஆரோக்கியம், தன தான்ய அபிவிருத்தி, சத்ரு நாசம் செய்து எல்லா வளமும் பெற்று நீடூழி வாழ அருளும் தலங்கள் இவை.

5	ஓங்காரேஸ்வரர் (அமலேஸ்வரர்) ஸ்ரீ ஓங்காரேஸ்வரர் தேவஸ்தானம் மத்தியப் பிரதேசம்	ஓங்காரம் உஜ்ஜயினிலிருந்து தெற்கே கண்ட்வா வழியில் 80 கிமீ. ஓங்காரம் ரோடு ரயில் நிலையத்திலிருந்து 11 கிமீல் கோயில்.
6	பீமாசங்கர் ஸ்ரீ பீமாசங்கர் தேவஸ்தானம் அம்பேகாவூன் தாலுக்கா பூனா மாவட்டம் 410509 மஹாராஷ்ட்ரம்	சென்னை மும்பை ரயில் மார்க்கத்தில் உள்ள பூனாவிலிருந்து சுமார் 128 கிமீ. பூனாவிலிருந்து லோனாவாலா

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
செய்த சிப்ரா நதிக்கதையில் உள்ள இடம். விக்ரமாதித்தன் ஆண்ட ஊர். அவனது பழைய கோட்டையும் பாழடைந்து உள்ளது. அவனுடைய குல தெய்வமான ஹரசித்திமாதா கோயிலும் உள்ளது. மூடனாக இருந்த காளிதாஸனுக்கு காளியும் அருளிய இவளே. அருகே மங்களேஸ்வரம் மற்றும் த்ரிவேணி ஆகிய இடங்கள் உள்ளன. சுமார் 30 கிமீ தூரத்தில் பைரவ் காட்டிலும் ஆலயங்கள் உள்ளன. துவாபர யுகத்தில் ஸாந்தீபினி முனிவரிடம் இங்கு கிருஷ்ணன், பலராமன், குசேலன் ஆகியோர் பாடம் கற்றதாக வரலாறு.குவாலியர் ராஜாவால் கட்டப்பட்ட கிருஷ்ணன் கோயிலும் உள்ளது. 29 கிமீல் சாஞ்சி ராமநாதர் மற்றும் கண்ணன் நாராயணன் நாச்சியார் கோவில்.	2515844, 2550444, 09425093142 0734-2550563, 98270 85676
நர்மதை நதிக்கரையில் உள்ள தலம். ஓம் என்கிற பிரணவத்தின் வடிவில் நதி பாய்வதால் இப்பெயர். பள்ளத்தில் சிவபெருமான் இருக்கிறார். கோவிலைச் சுற்றும் போது மேல் தட்டில் மஹாகாளர் உள்ளார். எதிர் மண்டபத்தில் ராமனின் மூதாதையர் மாந்தாதாலிங்கம் உள்ளது. அசுரர்களை அழிப்பதற்காக இறைவன் பாதாள உலகத்தில் இருந்து வெளிப்பட்டதாக ஐதீகம். பிரம்ம-விஷ்ணு-ருத்ரபுரி அடங்கியதால் த்ரிபுரி எனப் பெயர். சுவாமி உள்ளது ருத்ரபுரியில். காவேரி நர்மதா சங்கமத்தில் உறையும் இறைவன் என இவரை ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார். நர்மதையின் தென் கரையில் அமலேஸ்வரம் மற்றும் பஞ்சமுக கணபதியும், இந்திரேஸ்வரமும் பார்க்க வேண்டிய கோவில்கள்	ஓங்காரேஸ்வரர் முழு நேரமும் இடைவிடாது தரிசனம்.
பூமியின் சமதளம் மேலே உள்ளதால் திருக்கோயில் படிகளில் இறங்கி சென்று வழிபடும்படியாக உள்ளது. மஹாராஷ்ட்ராவில் உள்ள 5 ஜோதிர் லிங்கங்களில் ஒன்று.	ஸ்ரீ பீமாசங்கர் காலை 4.30 முதல் இரவு 9.30 வரை இடைவிடாது தரிசனம். திங்கள்,

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
		60கிமீ. லோனாவாலாவிலிருந்து 215 கிமீ.
7	க்ருஷ்ணேஸ்வர் ஸ்ரீ க்ருஷ்ணேஸ்வர் தேவஸ்தானம் எல்லோரா குகை அருகில் வழி தவுலதாபாத் ஔரங்காபாத் மாவட்டம் 431002 மஹராஷ்ட்ரம்	பம்பாயிலிருந்து மன்மாட் 251 கிமீ. ஔரங்காபாத் அங்கிருந்து 113 கிமீ. பர்பானி (மும்பாய் செகந்திராபாத் ரயில் பாதையில் உள்ள ரயில் நிலையம்) ரயில் நிலையத்திலிருந்து சுமார் 120 கிமீ. எல்லோரா குகைகள் ஔரங்காபாத்திலிருந்து சுமார் 5 கிமீ. இதற்கு அருகில் உள்ள தலம். தவுலதாபாத்திலிருந்து 11 கிமீ தூரம்

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
ஸஹ்யாத்ரி மலைத்தொடரில் உள்ள பீமா நதிக்கரையில் அமைந்த ஊர். இந்த நதி தொடங்குவதும் இங்கேதான். த்ரிபுராசுரனை அழித்த போது சிவபெருமான் களைப்பு நீங்க அமர்ந்த போது வெளிப்பட்ட வேர்வையே இந்த நதியாக ஓடுகிறது. சந்த்ரபாகா என பந்தர்பூரில் ஓடும் நதியே இது. கும்பகர்ணனின் மகன் பீமனுக்கும் சிவபெருமானின் பக்தன் காமரூபனுக்கும் இடையே நடந்த வாக்கு வாதத்தில் தன்னை வணங்கச்சொன்ன போது காமரூபன் எதிர்க்க சிவனையை தாக்க மூற்பட்டான் பீமன். பெருமான் வெளிப்பட்டு அவனை அழித்து தேவர்களைக் காத்தான். இந்த லிங்கமாக சுயம்புவாக வெளிப்பட்டார்.	பிரதோஷம், மஹாசிவராத்ரி, அமாவாசை, கிரகண நாட்.களில், கார்த்திகை மற்றும் ஸ்ரவண மாதத்தில் ஸ்ருங்கார் தரிசனம் மாலை 03.30 - 07.30 இல்லை. ஸ்ரவண மாதத்தில் இரவு 11.30 வரை நடை திறந்திருக்கும்.
மஹாராஷ்ட்ரத்தில் உள்ள மற்றோர் ஜோதிர்லிங்கம். வேருள், ஷிவாலய் மற்றும் க்ருஷ்ணேஷ்வர் என்கிற மூன்று தலங்களோடு இணைந்த கதைக்குறிப்பு கொண்ட ஊர். நூர்கள் வாழ்ந்த பகுதியில் மன்னன் ஒருவன் முனிவர்கள்மற்றும் ரிஷிகளின் மிருகங்களைக் கொன்றதால் சாபம் பெற்று பின்னர் பூச்சிகளால் தாக்கப்பட்டு வியாதியுற்றவன், தாகம் கொண்டு அலைய, குதிரைக் குளம்பில் தேங்கிய நீரைப் பருகி நற்கதி அடைந்தான். அந்த மன்னனின் பெயரே பேருள். பிற்காலத்தில் அதே இடத்தில் உண்டான பிரம்ம சரோவரமே ஷிவாலய் ஆனது. முன்பு ஒரு சமயம் பார்வதி மஞ்சள் மற்றும் குங்குமத்தை கட்டை விரலால் இணைத்துக் கலந்து இடக்கையில் வைத்து தலையில் பூசிக்கொள்ள எத்தணிக்க ஓர் லிங்கம் கையில் தோன்றி பின் ஒளியாய் மாறியது. சிவன் இதனைக் கண்டு அந்த லிங்கம் பாதாள உலகத்தில் இருந்த லிங்கமே எனக்கூறி தன் திரிசூலத்தால் வெளிக் கொணர்ந்தார். பார்வதியின் கட்டை விரலால் உருவானதால் க்ருஷ்ணேஷ்வர். (க்ருஷ்ண என்றால்	ஸ்ரீ க்ருஷ்ணேஷ்வர் காலை 05.30 முதல் இரவு 09.30 மணி வரை இடைவிடாது தரிசனம். ஸ்ராவண சமயத்தில் (ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் காலை 3 முதல் இரவு 11 மணி வரை.

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
8	இராமேஸ்வரம் ஸ்ரீ இராமநாதசுவாமி திருக்கோயில் இராமேஸ்வரம் 623526 இராமநாதபுரம் மாவட்டம் தமிழ்நாடு	சென்னை எழும்பூரிலிருந்து இராமேஸ்வரம் வரை செல்லும் நேரடி ரயில் உள்ளது. 700 கிமீ தூரம். இராமநாதபுரத்திலிருந்து சுமார் 55 கிமீ.

திருத்தல யாத்திரை செய்யும் சிவனடியார்களின் கவனத்திற்கு

1. முடிந்தவரை தனிப்பட்ட வாகனத்தில் திருக்கூட்டமாக செல்லவும். கோயில் வரை செல்வதற்கு இது ஏதுவாக இருக்கும். பயணம் செய்யும் அட்டவணையை முன்கூட்டியே திட்டமிட்டுச்செல்லவும். வாகனத்திலேயே தண்ணீர் கேன் எடுத்துச்செல்லவும்.
2. கோயில்களில் பல கிராமங்களில் இருப்பதால் முன்கூட்டியே சிற்றுண்டியை முடித்துக்கொண்டு கிளம்புவது உசிதம். மதிய உணவுக்கு அர்ச்சகர்-தொடர்பாளருடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே ஏற்பாடு செய்யலாம். தொலைபேசி தொடர்புகொண்டு சில கோயில்களை மதிய வேளையிலும் தரிசிக்கலாம்.
3. பல கோயில்களை தரிசிக்க திட்டமிட்டுள்ளோர் கோயில்களில் கூட்டமாகச்சென்று கூட்டமாக வெளிவருதல் நல்லது. முடிந்த வரை பேருந்து ஓட்டுனரை நல்ல முறையில் நம்மில் ஒருவராக பாவித்து நடத்துவது சுமுகமான பயணச் சூழ்நிலையை ஏற்படுத்தும்.
4. பாதைகளில் பயணம் செய்யும் அனைவரும் விழிப்புடன் எதிர்நோக்கிச்செல்வது நல்லது. ஏனெனில் கவனக்குறைவால் சில பாதைகளை தவற விட்டு ஏற்படும் நேர விரயத்தைத்தவிர்க்கலாம். ஒருவர்க்கு இருவரிடம் பாதை விவரத்தைக்கேட்பது நல்லது.
5. திட்டமிடும்போது அருகிலுள்ள வைணவத்தலங்களையும் தெரிந்து வைத்துக்கொண்டு தவறாமல் தரிசனம் செய்யுங்கள்.

9	நாக்நாத் ஸ்ரீ நாக்நாத் தேவஸ்தானம்	மும்மை செகந்திராபாத் ரயில் மார்க்கத்தில் உள்ள ஜங்ஷன்

தல வரலாறு	தொடர்பாளரின் தொலைபேசி எண்
சமஸ்கிருதத்தில் உராய்வு). 21 விநாயக பீடங்களில் ஒன்றான லக்ஷ்விநாயகர் சந்நிதியை வணங்கியே சிவனை வணங்குகின்றனர்.	
இராவணனைக் கொன்ற பாவம் தீர ராமர் பிரதிஷ்டை செய்து வழிபட்ட லிங்கம். ஹனுமனிடம் லிங்கம் கொண்டு வரச்சொன்னபோது கால தாமதம் ஆகவே சீதை தன் கைகளால் மணல் லிங்கம் பிரதிஷ்டை செய்ய இராமன் பூஜை செய்கிறார். அனுமன் இரு கைகளில் 2 லிங்கங்களுடன் கைலாயத்திலிருந்து வந்து கோபம் கொண்டு சீதை பிரதிஷ்டை செய்த லிங்கத்தை வாலால் எடுக்க எத்தனிக்க முடியாமல் போகிறது. சுவாமிக்கு வலப்புறம் அனுமன் கொணர்ந்த லிங்கமும், நுழைவு வாசலில் மற்றோர் லிங்கமும் உள்ளன. 22 புனிதக் கிணறுகள் உள்ள கோயில். நீராடுதல் சகல நன்மையையும் பயக்கும். கடற்கரை ஸ்நானம் மற்றும் திருப்புல்லாணியிலிருந்து 4 கிமீ தொலைவில் உள்ள சேதுக்கரைக்கடல்ஸ்நானம் விசேஷம்.12ம் நூற்றாண்டில் பராக்கிரம பாகு இலங்கை மன்னன் கட்டிய கோயில். சுமார் 10 பார்க்க வேண்டிய இடங்கள் உள்ளன. அவை விபீஷணன் பட்டாபிஷேகம் நடந்த இடம், இராமர் பாதம், அருகே சுயம்பு அனுமன், தனுஷ்கோடி, வானரங்கள் சேதுக்கரையில் இட்ட மிதக்கும் கற்கள் போன்றவை. 2 மணி நேரத்தில் சுற்றிப் பார்த்து விடலாம். காசி யாத்திரை இங்கு வந்து தரிசித்து கங்கையால் அபிஷேகம் செய்தால் தான் பூர்த்தி. தனுஷ்கோடியில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பில் மறைந்து கிடைத்த இராமர் உற்சவர் தக்ஷிணாமூர்த்தி சந்நிதிக்கு அருகிலும் மேல வாசலில் அதே இடத்தில் கிடைத்த சித்தியுடன் கூடிய பெரிய விநாயகரும் உள்ளனர்.	ஸ்ரீ இராமநாதசுவாமி ஸ்ரீ பர்வதவர்த்தினி தினமும் காலை 5 முதல் 6 மணி வரை ஸ்படிக லிங்க தரிசனம். மார்கழி மற்றும் விசேஷ நாட்களில் மாறுதலுக்குட்பட்டது. 05.00-01.00 03.00-09.00 04573 - 221223 04573 223567 (ஸ்ருங்கேரி மடம்) நாராயணன் 94435 02607
மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ளது. தக்ஷணின் அவதிப்பினால் வெகுண்ட சிவன் காடுகளில்	ஸ்ரீ நாக்நாத் காலை 4 மணி முதல்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
	அவுண்டா ஹிங்கோலி தாலுக்கா பர்பாணி மாவட்டம் 431705 மஹாராஷ்ட்ரம்	பர்பாணி. இது மும்பையிலிருந்து 10 மணி நேர ரயில் பயணம். பர்பாணி அவுண்டாவிற்கும் பர்லிக்கும் இடையில் உள்ள ஊர். வடக்கில் 50 கிமீ தூரத்தில் அவுண்டாவும் தெற்கில் 55 கிமீ தூரத்தில் பர்லியும் உள்ளன. பர்பாணியிலிருந்து ஔரங்காபாத் செல்லலாம். 3 மணி நேர ரயில் பயணம். முன்பதிவு செய்த ரயிலாக இருந்தாலும் பொதுவாக அளவிடமுடியாத கூட்டம் திகழ்கிறது.
10	வைத்தியநாத் ஸ்ரீ வைத்தியநாத் மந்திர்பர்லிபீட் மாவட்டம் 431515 மஹாராஷ்ட்ரம்	மேலே குறிப்பிட்ட பாதை. பர்பாணியில் இருந்து சுமார் ஒன்றரை மணி நேரப் பயணம். தனியார் வாகனம் இருந்தால் ஒரே நாளில் இந்த இரண்டு கோயில்களையும் தரிசிக்கலாம். சிவனை தரிசிக்க படிகள் ஏறி செல்ல வேண்டும். எளிமையாக ஏறிவிடலாம். சுமார் 70 படிகள். பர்பாணியிலிருந்து சுமார் 15 கிமீ தூரத்தில் பர்லி வழியில்

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
திரிந்து பின்னர் அமராதகம் என்கிற இடத்தில் தன் உடலை சாம்பலாக்கி மாற்றிக்கொண்டு மறைந்தார். அச்சமயம் வனவாசத்தில் இருந்த பாண்டவர்களின் மாடுகள் மேய்ந்த பின்னர் நதியில் பாலைச் சுரப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டனர்.ஒரு நாள் பீமன் இந்த அதிசயத்தைப் பார்த்து அதில் நிச்சயமாக தெய்வமிருக்கும் என உணர்ந்து தண்ணீரை இரைக்க ஆரம்பித்தார். நதியின் மத்ய பாகம் கொதிக்கவே தன் கதையால் தாக்கினான். அப்போது இரத்தம் பீரிட இந்த ஜோதிர்லிங்கம் வெளிப்பட்டது. பெருமானுக்கு இங்கு எதிரில் நந்தி இல்லை. தனியாக பின்புறம் நந்திகேஸ்வரர் கோயில் உள்ளது. ருணமோர்ச்சன தீர்த்தம் உள்ளது. 12 ஆண்டுக்கு ஒரு முறை கங்கை நீர் கபில ஷஷ்டியில் இந்த தீர்த்தத்திற்கு பாதார்பணம் செய்யப்படுகின்ற போது ஸ்படிகத்தைப் போல் நீர் தெளிவாகிறது. அவுரங்கசீப் மன்னன் இந்தக் கோயிலை இடிக்க முற்பட்ட போது வண்டுகள் வந்து படையைத் துறத்த அப்படியே விட்டுவிட்டு ஓடினர். சில சமயம் பாம்புகள் சிவன் மீது பாதுகாவலாக இருப்பதும், வைக்கும் பாலை உண்டு செல்வதும் இப்போதும் நிகழ்கிறது. சோமநாத், இராமேஸ்வரம், ஸ்ரீ சைலம் போலல்லாமல் சுவாமியைத் தொட்டு அபிஷேகம் செய்யலாம்.	இரவு ஒன்பது வரை. ஸ்ராவண மாதத்தில் கூடுதல் நேரம். ஹாரத்தி நேரமாகிய 12.00 - 12.30 மற்றும் மாலை 4.00 -4.30க்கு கர்ப்பக் கிரகத்திற்குள் அனுமதியில்லை.
கன்யாகுமரி, உஜ்ஜயினி மற்றும் பர்லி ஆகிய தலங்கள் நேர்க்கோட்டில் உள்ளவை. நாகநாராயண மலை என்னும் மேரு மலையின் சரிவில் உள்ளது. பர்லி ஜோதிர்லிங்கத் தலம் ஒன்றில் தான் அம்பாளுடன் காட்சி தருகிறார். ஆகவே இது அனோகி காசி எனப்படுகிறது. அம்பேஜோகையில் உள்ள யோகேஸ்வரியை பர்லி வைத்தியநாதர் மணந்ததாக வரலாறு. குறித்த நேரத்தில் திருமண கோஷ்டியினர் வந்து சேராததால் அவர்கள் கல்லாக மாறினர் என்றும்	ஸ்ரீ வைத்யநாத் ஸ்ரீ யோகேஸ்வரி காலை 4 மணி முதல் இரவு ஒன்பது வரை. ஸ்ராவண மாதத்தில் கூடுதல் நேரம். பாபா வைத்யநாத் டெம்பில் மானேஜ்மண்ட் போர்டு நிர்வாகம். அம்பே ஜோகர்

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
		குகைக்குக் கீழ் சுயம்பு நரசிம்மர் உள்ளார். உடலைக் குறுக்கி குனிந்து பார்க்க வேண்டும்.

திருத்தல யாத்திரை செய்யும் சிவனடியார்களின் கவனத்திற்கு

6. அர்ச்சகர்-தொடர்பாளர் பாதைப்பற்றிய தெளிவான விவரம் சொல்லும் வகையில் இருப்பார். தொலைபேசி எண் இல்லாத இடங்களுக்கு முன்கூட்டியே கடிதம் எழுதிவிடுங்கள். மழைக்காலங்களில் பயணத்தை தவிர்ப்பது நல்லது.

7 வெறும் கையுடன் பெரியவர்கள், குழந்தைகள், குரு-ஆசார்யர்,இறைவன் இவர்களைக் பார்க்கச்செல்லக்கூடாது. அன்பர்கள் முடிந்த வரை அர்ச்சனைக்குரிய பொருள்கள், மலர், நெய், எண்ணெய், கற்பூரம் போன்றவற்றை கையோடு எடுத்துச்செல்லுங்கள். காரணம் சில கோயில்களின் அருகில் கடைகளைக்காண்பது அபூர்வம்.

8. தீபாராதனையின் போது தாராளமாக காணிக்கையை அளியுங்கள். மெய்க்காப்பாளர், ஒதுவார், கோயில்மாடு பராமரிப்பவர் போன்றவர்களுக்கு இயன்ற வரை உதவுங்கள். நித்ய பூஜை தடைப்பட்ட கோயில்கள், எண்ணெய்க்கென ஏங்கும் விளக்குகள், ப்ரதோஷம் தடைப்பட்டிருக்கும் கோயில்கள் இவைகளுக்கு தாராளமாக உதவுங்கள்.

11	காசி ஸ்ரீவிஸ்வநாத் மந்திர் வாரணாசி 221001 உத்திரப் பிரதேசம்	சென்னை வாரணாசி நேரடி ரயில் உள்ளது. இரண்டு இரவுகள் ஒரு பகல் பயணம். 1853 கிமீ. அலகாபாத், கயா, நைமிசாரண்யம், அயோத்தியா, சித்ரகூடம், மிர்ஸாபூர் ஆகிய தலங்களை காசி நகரை மையமாக வைத்து தரிசிக்கலாம்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
அம்பாள் பர்லிக்கு வெளியில் காத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. அமிர்தம் கடைந்த போது சிவனிடம் தன்வந்த்ரி, 14 ரத்னங்களும், அமிர்தமும் மறைக்கப்பட்ட போது அசுரர்கள் சிவனைத் தொட்டு அமிர்தம் எடுக்க எத்தணிக்க நெருப்புப் பிழம்புகள் தாக்கின. தேவர்கள் தொட்ட போது அவர்களுக்கு அமிர்தம் கிடைத்தது. இதனால் சுவாமிக்கு அமிர்தேஸ்வரர் மற்றும் தன்வந்தரி என்கிற பெயரும் உண்டு. இந்த மலையில் அபூர்வ மருந்து மூலிகைகள் இருப்பதாலும் இவருக்கு வைத்யநாதர் எனப் பெயர். இன்றும் சாதி வித்தியாசம் இன்றி தொட்டு பூஜை செய்யலாம். சாளக்கிராமத்தால் உருவான மூர்த்தம். சுற்றி நந்தா விளக்கு எரிகின்றன. அர்த்த மண்டபமும் கர்ப்பக்கிரகமும் ஒரே அளவானது. மார்க்கண்டேயர் புராணமும் சத்யவான் சாவித்ரி புராணமும் நடந்த தலமாகக் கருதப்படுகிறது. தும்பிக்கையில்லாத வஸ்தாது உருவில் உள்ள விநாயகரை வணங்கித்தான் இந்தப் பெருமானை வணங்க வேண்டும். சுவாமி ஜகன்மித்ர நாகாஜியின் சமாதியுள்ளது.	02466-248226 வஸந்த் நல்நாத் 94234 70882 அசோக் பூஜாரி 98224 75990
சிவபெருமானின் திரிசூலத்தில் உள்ள பகுதியே காசி என்று புராணம் கூறுகிறது. 2510 கிமீ தூரம் புனித கங்கை ஓடும் நகரம். பார்வதி பரமேஸ்வரனின் கண்களைப் பொத்திய போது உலகம் இருண்டு பிரளயத்தை சந்தித்தது. நெற்றிக் கண்ணை உண்டாக்கி உலகை முன்பிருந்த நிலைக்கு கொணர்ந்தான். தவறு செய்ததை உணர்ந்த பார்வதியின் கைகளிலிருந்து ஆறாக பெருக்கெடுத்து ஓடிய நீரே கங்கையாகி சிவன் ஜடாமுடியில் தரிக்கப்பட்டது. அந்தப் புனித கங்கை பாயும் தலத்தில் சிவனை நாராயணன், சூரியன், பிரமன் பூஜித்தனர். 10 அசுவமேத யாகத்தை பிரமன் செய்ததாகத் தகவல். அன்னைக்கு உள்ளே இரண்டு வடிவங்கள். ஒன்று நின்ற கோலத்தில் சுயம்பு. வெள்ளிக்கவசத்துடன்.	ஸ்ரீ விஸ்வநாதர் ஸ்ரீ விசாலாக்ஷி காலை 3 மணிக்குக் திறக்கப்பட்டு இரவு 11.30 மணிக்கு மூடப்படுகிறது. இரவு 10.30க்கு அர்த்த ஜாமப்பூஜை. தினமும் இரவு 7.30க்கு முதல் 9.00 மணி வரை சப்த ரிஷி பூஜை. 0542 - 2390550, 0542-2392629. தொடர்பாளர் சீப் எக்ஸிகியூடிவ் ஆபீசர், விஸ்வநாத் மந்திர்,

எண்	கோயில் பெயரும் முகவரியும்	செல்லும் வழி
12	கேதார் ஸ்ரீ கேதாரீஸ்வரர் திருக்கோயில் கேதார் 246445 உத்திராஞ்சல் மாவட்டம்	ஹரித்வாரிலிருந்து 250 கிமீ மலைச் சாலைப்பயணம். இடையே கேதார்நாத்துக்குப் பாதை பிரிகிறது. ஜோஷி மட் என்கிற இடத்திலிருந்து மலைமேல் செல்லும் பாதை மாலை 4 மணிக்கு நிறுத்தப்படுகிறது. எனவே மாலை 4 மணிக்கு இந்த இடத்தைக் கடந்தால் நேராக பத்ரி செல்லலாம். இல்லையேல் இரவு ஜோஷி மட்டில் தங்கிதான் செல்ல வேண்டும். குதிரையில் 14 கிமீ செல்ல வேண்டும்.

தல வரலாறு	கோயில் திறந்திருக்கும் நேரம் தொடர்பாளரின் தொலைபேசி எண்
மற்றொன்று வீற்றிருந்த கோலத்தில் உள்ளது. அம்பிகையின் குண்டலம் விழுந்த சக்திபீடமாக விளங்குகிறது. மணிகர்ணிகை (கர்ணம் காது மணி-குண்டலம்) பீடம் என்றும் கூறப்படுகிறது. இந்த மணிகர்ணிகையை மறைக்கப் பார்த்த கோயில் பணியாளர்கள்தான் இன்று அங்கு பிணங்களை எரிக்கும் சாபம் பெற்று பணிவிடை செய்கிறார்கள். இது சக்தி பீடமாகவும் விளங்குகிறது. கேதாரீஸ்வரர் கோயிலில் முருகன் சந்நிதி உள்ளது.	வாரணாசி 221 001. முறைப்படி காசி யாத்திரை மேற்கொள்ளும் தகவல் ங்ஆறுமுகனின் திருப்புகழ்த் தலங்கள்ங புத்தகத்தில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.
3584 மீட்டர் உயரத்தில் உள்ள ஜோதிர்லிங்கத்தலம். மந்தாகினி நதி ஓடுகிறது. மஹாபாரத காலத்திலிருந்து இருக்கும் இடம். பஞ்ச பாண்டவர்களுக்கு பாப விமோசனம் கிடைக்க எருது உருவில் இருந்த அவரைப் பின் தொடர அவர் பூமியில் குதித்தார். தன்னுடைய முதுகுப் பகுதியை இங்கேயே தங்கச் செய்தார். அந்தக் கூம்பு வடிவே இங்கு சிவனாக வழிபடப்படுகிறது. மீதி 4 பகுதிகளில் பாஹு(தோள்,) துங்கநாத்திலும், வாய் ருத்ரநாத்திலும், நாபி மத்மேஷ்வரிலும், ஜடாமுடி கல்பேஸ்வரிலும் பஞ்ச கேதாராக வணங்கப்படுகிறது. கௌரிகுண்ட் என்கிற இடத்திலிருந்து 14 கிமீ நடந்து செல்ல வேண்டும். ஏப்ரல் முதல் அக்டோபர் வரை சந்நிதி திறந்திருக்கும். பாண்டவர் நிறுவிய கோயிலுக்கு அருகில் உள்ள ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட 8ம் நூற்றாண்டு கோயிலே தற்போது வழிபடப்படுகிறது. 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. 32 வயதில் சமாதியடைந்த ஆதி சங்கரரின் சமாதி பின்புறம் உள்ளது. சக்தி பீடத்தில் அம்பாளின் வலது கரம் விழுந்ததாகக் கூறப்படும் இடம்.	ஸ்ரீ கேதாரீஸ்வரர் ஸ்ரீபுவன சுந்தரிதி சீப் எக்ஸிகியூடிவ்ஆபிசர், பத்ரிநாத் மற்றும் கேதார்நாத் டெம்பிள் கமிட்டி, பத்ரிநாத் தாம், சமோலி மாவட்டம், உத்திராஞ்சல் 246422 பொதுவாக ஏப்ரல் 21 திறக்கப்பட்டு அக்டோபர் முடிவு வரை முழு நேரமும் திறந்திருக்கும். மற்ற 6 மாதங்கள் பனிக்காலத்தில் மூடப்பட்டிருக்கும். ஜி.எம்.வி.என் சுற்றுலா மையம், பத்ரிகேதார். 01364 - 263261

நா	✓	1	ஞ, அ	✓	56	ஞ, அ	111	ஞ	166	ஞ	221
அ, சு		2	ஞ	✓	57	ஞ	✓ 112	ஞ	167	ஞ	✓ 222
சு		3	மூ	✓	58	ஞ	113	ஞ	168	ஞ	223
சு		4	ஞ		59	மூ	✓ 114	மூ	✓ 169	ஞ	224
ஞ		5	ஞ	✓	60	மூ	115	ஞ	170	ஞ	225
ஞ		6	ஞ		61	ஞ, சு	116	ஞ	✓ 171	ஞ	226
ஞ		7	ஞ		62	ஞ, ம	117	ஞ	✓ 172	ஞ	✓ 227
ஞ	✓	8	ஞ, அ		63	அ	✓ 118	ஞ	173	ஞ	228
சு		9	ஞ		64	அ	✓ 119	அ	174	ஞ	229
ஞ	✓	10	நா		65	ஞ, அ, ம	✓ 120	ஞ	175	ஞ	230
ஞ, அ, ம		11	ஞ		66	மூ	✓ 121	ஞ	✓ 176	அ	231
ஞ		12	ஞ, சு		67	ஞ	✓ 122	ஞ	177	ஞ	232
ஞ		13	நா	✓	68	ஞ, அ, ம	✓ 123	நா	✓ 178	ஞ	233
ஞ		14	ஞ, சு		69	அ	124	அ	179	ஞ	234
மூ	✓	15	ஞ, அ	✓	70	ஞ	✓ 125	அ	180	சு	235
ஞ, அ		16	ஞ		71	ஞ, அ	126	ஞ	181	ஞ	236
சு		17	ஞ		72	அ	127	ஞ, சு	182	அ	237
ஞ		18	மூ		73	அ, ம	✓ 128	மூ	183	மூ	✓ 238
நா	✓	19	மூ		74	ஞ, அ	✓ 129	ஞ, அ, ம	✓ 184	ஞ	✓ 239
மூ	✓	20	அ, சு		75	மூ	✓ 130	சு	185	மூ	240
ஞ	✓	21	ஞ, அ		76	ஞ, அ	✓ 131	ஞ	186	ஞ, அ	241
சு	✓	22	ஞ, சு		77	ஞ	132	நா	✓ 187	மூ	✓ 242
ஞ	✓	23	சு		78	ஞ	133	சு	188	ஞ	243
ஞ	✓	24	ஞ, அ		79	ஞ	✓ 134	அ	189	சு	✓ 244
ஞ, அ		25	அ	✓	80	ஞ, அ	135	ஞ, சு, ம	190	ஞ, அ, ம	245
சு		26	ஞ, சு		81	அ, ம	136	ஞ, ம	✓ 191	ஞ	246
ஞ	✓	27	அ		82	ஞ, அ	✓ 137	மூ	192	ஞ, சு	✓ 247
நா	✓	28	ஞ, சு	✓	83	ஞ	138	ஞ	193	ஞ	✓ 248
ஞ		29	சு	✓	84	அ	✓ 139	ஞ	194	ஞ	✓ 249
ஞ	✓	30	ஞ, அ		85	ஞ	140	அ	195	ஞ, அ	✓ 250
ஞ		31	சு		86	அ	✓ 141	ஞ, அ	✓ 196	ஞ, சு	✓ 251
